**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 03 -04-2025

SC. 76/2022

அ.சா 6 – அம்பேத் ,

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ம் நாள் அம்பேத் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அம்பேத் | தந்தை பெயர் | சீத்தாராமன் |
| வயது | 58 | கிராமம் | கோல்டன் தெரு |
| வட்டம் | தர்மபுரி | மாவட்டம் | தர்மபுரி |

முதல் விசாரணை : –

நான் தர்மபுரியில் உள்ள கோல்டன் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு மதுபானக்கடை எண் 3034 ல் உத்தனப்பள்ளியில் டாஸ்மார்க்கடை அட்டன்டராக வேலை பார்த்து வந்தேன். தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் டாஸ்மார்க் கடையில் வேலையை முடித்து விட்டு வீட்டிற்கு சென்ற பிறகு , அன்று இரவு சுமார் 10.15 மணியளவில் சூப்பர்வைசர் சேகர் போன் செய்து டாஸ்மார்க் கடையில் அன்று விற்பனையாகி இருந்த பணம் திருடு போனது என்று , தகவல் சொன்னார். 3 நபர்கள் வந்து அவரை அடித்து விட்டு பணத்தை திருடி கொண்டு சென்றதாக சொன்னார் . உடனே நான் சம்பவத்தை கேள்விப்பட்டு வந்து திருடி கொண்டு சென்ற நபர்களை தேடிப்பபார்த்தோம், அவர்கள் கிடைக்கவில்லை. அதன்பின்பு காயம் பட்ட வெங்கட்ராஜை மருத்துவமனைக்கு அழைத்து சென்று காயத்திற்கு மருந்து போட்டு காவல் நிலையத்தில் , புகார் கொடுத்தோம் . போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த சம்பவம் பற்றி சேகர் சொல்லிதான் எனக்கு தெரியும் . நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலிசாரிடம் சொன்னேன். சம்பவத்தை

கேள்விபட்டு அன்றே சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டு அதன் பிறகு நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur